# சாட்சிய வாக்குமூலம்
## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அசல் வழக்கு எண் : 132025
நாள் : 12.03.2026
வா.சா. : 2
பெயர் : ரெங்கநாதன்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் சொல்லவந்துள்ளேன். இந்த வழக்கு சொத்தின் நீள, அகலம் விஸ்தீரணம், சர்வே நம்பர் எனக்கு தெரியாது. வாதி ராணுவத்தில் பணியில் சேர்ந்து எந்த ஆண்டு ஓய்வு பெற்றார் என்று தெரியாது. சென்னை டான்சி நிறுவனத்தில் எந்த ஆண்டு பணியில் சேர்ந்து எப்போது ஓய்வு பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியின் பிள்ளை எந்த பள்ளி கல்லூரிகளில் படித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதியின் மனைவி எப்போது யாரிடமிருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அதனால் வாதியின் பணத்தை கொடுத்து கிரயம் பெறப்பட்டது என்று பொய்யா சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எவ்வளவு தொகை பென்சன் பெற்று வருகிறார் என்றால் ரூபாய் ஆயிரத்திற்குள்ள இருக்கும் என்கிறார். வாதி ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி அவர் நிறைய பென்சன் வாங்குவார் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை வாதியின் மனைவி தன் மகன் இரண்டாம் பிரதிவாதி செட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. செட்டில்

மெண்ட் செய்த அதே நாளில் மீதமுள்ள சொத்துக்களை மூன்றாம் பிரதிவாதி அடையும்படி வாதியின் மனைவி வாய்மொழியாக ஒரு ஏற்பாடு செய்து விட்டார் என்றால் அந்த விஷயம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.